1979 ஏப்ரல் 2]

* வினா எண். 603—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திண்டுக்கல் கள்ளாத்துப்பட்டியில் உள்ள பள்ளியில் மதிய உணவு விஷம் கலந்து விட்டதன் காரணமாக மாணவர்கள் இறந்தது உண்மையா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

பன்னாட்டு திராவிட மொழியியல் நிறுவனத்திற்கு மானியம்.

* வினா எண். 609—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள பன்னாட்டு திராவிட மொழியியல் நிறுவனத்திற்கு அரசு தொடர் செலவுகளுக்கும் தொடராச் செலவுகளுக்கும் மானியங்கள் வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) திருவனந்தபுரத்திலுள்ள பன்னாட்டு திராவிட மொழியியல் பள்ளிக்கு 1978–79-ம் ஆண்டு முதல் ஆண்டொன்றுக்கு ரூ. 1.36 இலட்சம் வீதம் ஐந்து ஆண்டுகளுக்கு தொடர் மானியமாக ஐந்தாண்டுத் திட்டப் பணிகளுக்காக அரசு ஒப்பளிப்புச் செய்துள்ளதுடன், தமிழ் இலக்கணப் பெரியார் தொல்காப்பியர் பெயரில் ஒரு கட்டடம் கட்டும் வகைக்காக தொடராச் செலவினமாக ரூ. 4.51 இலட்சம் வழங்குவதற்கும் அரசு ஒப்புக்கொண்டு, இத்தொடரா மானியத்தின் முதற் தவணையாக ரூ. 1 இலட்சம் வழங்க ஆணையிட்டுள்ளது. மீதித் தொகை கட்டடம் கட்டுமானப் பணி முடியக்கூடிய நிலையில் இரண்டு சம தவணைகளில் வழங்கப்படும்.

உள்ளாட்சி மன்றங்கள் உள்ள கட்டிடங்கள்.

* வினா எண். 610—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உள்ளாட்சி மன்றப் பகுதிகளில் அமைந்துள்ள கட்டிடங்கள் இடிக்கப்படுவது பற்றிய தாக்கீது ஏதேனும் உள்ளாட்சி மன்றங்களுக்கு அண்மையில் அனுப்பப்பெற்றதா?

(ஆ) ஆம் எனில். அதன் விபரம் என்ன?